# மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்

| | |
|---|---|
| அ.வ.எண். 6 /2020 | பி.வா.சா. 2 |
| பெயர் : ராமசாமி | த/பெ. பூ.ராமசாமி |
| தாலுகா : நத்தம் | கிராமம் : ஒத்தினிபட்டி |
| தேதி : 18.03.2026 | வயது : 57/2026 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்

<u>பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை</u>

1. நான் நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். இந்த வழக்கின் வாதி, பிரதிவாதிகளை தெரியுமா என்றால் தெரியும். வாதி வெ.ராமசாமி என்பவர் எனது தாத்தா பூசாரி அழகன் என்பவரின் உடன் பிறந்த தம்பி மகன் ஆவார். பிரதிவாதிகள் பஞ்சு அம்மாள், சின்னச்சாமி அம்பலம், கருப்பையா என்ற பெரியசாமி ஆகியோர் எனது உறவினர்கள் ஆவார்கள். ராமசாமி என்பவர் வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்து ஆதியில் எனது தாத்தா பூசாரி அழகன் என்பவருக்கு பாத்தியமானது ஆகும். எனது தாத்தா அவர் உயிருடன் இருந்த காலத்திலேயே அவரது வாரிசுதாரர்களான எனது தந்தை பூ.ராமசாமி, லெட்சுமணன், நாச்சான் ஆகியோருக்கு சொத்துக்களை வாய்மொழியாக பாகப் பிரிவினை செய்து கொடுத்ததில் வழக்கு சொத்து எனது தந்தை பூ.ராமசாமிக்கு ஒதுக்கப்பட்டது. அந்த சொத்தின் சர்வே எண்.74/40 ஆகும். எனது தந்தை ராமசாமி மேற்படி சொத்தை 2002ம் வருடம் 1ம் பிரதிவாதியின் கணவரான சின்னச்சாமி என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்தார்.

2. எனது தந்தை இவ்வழக்கின் வாதியான வெ.ராமசாமி என்பவருக்கு வீடு கட்ட இடம் இல்லை என்று சொன்னதால் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்திலிருந்து 5 செண்ட் நிலத்தை முன்பே கொடுத்திருந்தார். அதனடிப்படையில் வெ.ராமசாமி பெயரில் யூ.டி.ஆர். பட்டா ஏற்பட்டது. யூ.டி.ஆர்.

பட்டா ராமசாமி பெயரில் ஏற்பட்டது குறித்து அவரை எனது அப்பா அழைத்து 5 செண்ட் நிலம் கொடுக்கப்பட்டுவிட்டது, பட்டா ஏற்பட்டுள்ளது குறித்து கேட்டபோது எனக்கும், பட்டாவில் கண்ட சொத்துக்கும் சம்பந்தம் இல்லை என்று வாதி ராமசாமி எனது அப்பாவிற்கு எழுதிக் கொடுத்துள்ளார். அந்த ஆவணம் தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.13ஆன பட்டா பாத்திய விடுதலைப் பத்திரம் என்றால் சரிதான். அதேபோல் பட்டா பாத்திய விடுதலைப் பத்திரம் ஒன்றை வாதி ராமசாமி 1ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த ஆவணம்தான் தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.14 ஆவணம் என்றால் சரிதான்.

3) எனது அப்பா சர்வே எண்.74/40ல் எவ்வளவு இடம் யார், யாருக்கு விற்றுள்ளார் என்றால் 1ம் பிரதிவாதிக்கு ஒத்தினிப்பட்டி ரோட்டிற்கு வடக்கு பக்கம் உள்ள 14 செண்ட்டை கிரையம் செய்து கொடுத்தார். நாகூர் கனி என்பவருக்கு அதற்கு அருகே உள்ள 14 செண்ட் இடத்தை விற்றுள்ளார். அதற்கு அருகே உள்ள இடத்தை எனது அண்ணன் ராஜாங்கம் என்பவர் 1ம் பிரதிவாதி பஞ்சம்மாளுக்கு 15 செண்ட் இடத்தை விற்றுள்ளார். மீதமுள்ள 5 செண்ட் இடமானது வாதி ராமசாமிக்கு எனது தகப்பனார் கொடுத்துள்ளார். நாகூர்கனிக்கு விற்ற இடத்தை அவர் கருப்பையா என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்தார். மேற்படி கருப்பையா என்பவரிடமிருந்து 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார். தற்போது மொத்தம் 43 செண்ட் நிலமானது 1ம் பிரதிவாதி வசம் உள்ளது. வாதி ராமசாமிக்கு மேற்படி 43 செண்ட் நிலத்தில் உரிமையில்லை என்றால் சரிதான். வாதிக்கும், பிரதிவாதிகளுக்கும் என்ன பிரச்சனை என்று தெரியுமா என்றால் தெரியாது.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

4) எனது தாத்தா பெயர் பூசாரி அழகன் என்றால் சரிதான். மேற்படி பூசாரி அழகன் என்பவரது தந்தை பெயர் ராமசாமி என்றால் சரிதான். மேற்கண்ட ராமசாமி என்பவருக்கு வெள்ளை சாத்தான், எனது தாத்தா பூசாரி அழகன்,

வெள்ளை கண்ணு ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். வெள்ளை சாத்தான் என்பவரது மகன்தான் வாதி வெ.ராமசாமி என்றால் சரிதான். எனது தாத்தா பூசாரி அழகன் என்பவருக்கு எனது தந்தை ராமசாமி, நாச்சான், லட்சுமணன் ஆகிய மூன்று பேர் மக்கள் என்றால் சரிதான். எனது தந்தை ராமசாமிக்கு நான், ராஜாங்கம் மற்றும் சிவக்குமார் ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். எங்களுக்கு பஞ்சையம்பட்டி அருகே உள்ள ரோட்டிற்கு தெற்கு பக்கமாக 1–1/2 ஏக்கர் தென்னந்தோப்பு உள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்தானது எனது தந்தை ராமசாமிக்கு பாகமாக கிடைத்தது என்றால் சரிதான், அந்த சொத்தில் எனது தந்தை ராமசாமிக்கும், எனது சித்தப்பா லட்சுமணனுக்கும் பாகம் பிரித்து தரப்பட்டது.

5) சர்வே எண் 74/40 ஆன வழக்கு சொத்து பூர்வீக சொத்து என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு எனது தந்தையும், நானும் சேர்ந்து எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் வாரிசுதாரர்கள் முறையை தெரிவித்தும், வாய்க்கரலாக பாகம் பிரித்துக் கொண்டதில் பாகமாக கிடைத்தது என்ற விபரத்தையும் தெரிவித்து எழுதிக் கொடுக்கப்பட்டதா என்றால் அது பற்றி தெரியாது. பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் எங்களுக்கு பூர்வீக பாத்தியப்படியும், பாக பாத்தியமாகவும் கிடைத்த சொத்து என்றுதான் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. பி.வா.சா.ஆ.7ஆன நாகூர் கனிக்கு நானும், எனது தந்தையும் எழுதிக் கொடுத்த கிரைய ஆவணத்தில் எங்களுக்கு பூர்வீக பாத்தியப்படியும், அனுபவ பாத்தியப்படியுமான சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது.

6) பி.வா.சா.ஆ.8ல் எனது அண்ணன் ராஜாங்கம் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணத்தில் 1684 பட்டா பிரகாரம் எனது தந்தை ராமசாமிக்கு ஏற்பட்டு அதனடிப்படையில் கிரையம் செய்து கொடுத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. மேற்படி 3 கிரைய ஆவணங்களில் ஏதாவது ஒரு கிரைய ஆவணத்திலாவது வாதி வெ.ராமசாமி என்பவருக்கு 5 செண்ட் நிலம் கொடுக்கப்பட்டதாகவோ அவரது நிலமுள்ள இடத்தை

நான்குமாலாக காட்டியோ எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எனது தம்பி சிவக்குமாருக்கு பாகம் உள்ளதாக மேற்படி கிரைய ஆவணங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.8ல் கண்ட 1684 பட்டா வாதி ராமசாமி பெயரில் உள்ளது என்றால் சரிதான், யூ.டி.ஆர்.பட்டா ஏற்பட்டுள்ளது. மேற்படி வாதி பெயரில் ஏற்பட்ட யூ.டி.ஆர்.பட்டாவை ரத்து செய்ய எனது தந்தையோ, நானோ முயற்சி செய்தோமா என்றால் இல்லை. யூ.டி.ஆர்.பட்டா ஏற்பட்டுள்ள விபரம் தற்போதுதான் நீதிமன்ற அழைப்பாணை வந்த பிறகு தெரியவந்தது. யூ.டி.ஆர்.பட்டா ஏற்பட்ட விபரம் தெரிந்துதான் எனது தந்தை 5 செண்ட் இடத்தை வாதிக்கு கொடுத்தார். பி.வா.சா.ஆ.13, 14 ஆவணங்கள் ஏற்பட்டுள்ளது தற்போதும் வாதி பெயரில் பட்டா உள்ளது என்பதால் எனது தாத்தா பூசாரி அழகன் பெயரில் பட்டா வழங்கக் கோரி அப்பீல் செய்துள்ளேன்.

7) பி.வா.சா.ஆ.13, 14 ஆவணங்கள் எழுதப்பட்ட காலத்திலேயே யூ.டி.ஆர்.பட்டா வாதி பெயரில் ஏற்பட்ட விபரம் தெரியும் என்றால் சரிதான். அப்பீல் தாக்கல் செய்ததது தொடர்பான ஆவணங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் எப்போது எனக்கு தெரியும் என்றால் சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு தெரியும். 1ம் பிரதிவாதி இந்த வழக்கில் என்ன விபரங்கள் தெரிவித்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது. 2ம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் வழக்கு சொத்துக்கள் வெள்ளைசாத்தான் மற்றும் பூசாரி அழகன் இருவரும் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்று தெரிவித்து, வெள்ளைக்கண்ணு என்பவரை காட்டாமல் தெரிவித்துள்ளது சரியா, தவறா என்றால் தவறானது.

8) பி.வா.சா.ஆ.13 ஆவணத்தில் கைரேகை வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது யாருடைய கைரேகை என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் பக்கம் மூன்றில் எனது பெயரில் தவறுதலாக ------- பட்டா நம்பர் குறிப்பிடாமல் காலியாக உள்ளது என்றால் சரிதான். அதே ஆவணத்தில் சொத்து விபரத்தில் மேற்கு பக்கம் நான்குமால்

குறிப்பிடப்படாமல் உள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ள நபர்களின் முழு விபரங்கள் குறிப்பிடப்படாமல் உள்ளது என்றால் சரிதான். 5 முதல் 9 சாட்சிகள் பெயரோ கையொப்பமோ இல்லாமல் காலியாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.14 ஆவணத்தில் எழுதி வாங்குபவர் என்ற காலத்தில் எதுவும் குறிப்பிடப்படாமல் உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.13 ஆவணத்தில் 48 செண்ட் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.14 ஆவணம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

9) நானும், எனது தந்தையும் மற்றும் எனது அண்ணன் ராஜாங்கம் எழுதிக் கொடுத்த கிரைய ஆவணங்களில் நான்குமால்கள் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், மற்ற பாகவஸ்தர்கள் காட்டப்படவில்லை என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.6, 7 கிரைய ஆவணங்களில் பட்டா எண் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் அதுபற்றி தெரியாது. பி.வா.சா.ஆ.8 ராஜாங்கம் எழுதிக் கொடுத்த கிரைய ஆவணத்தில் வாதி பெயரில் உள்ள பட்டா எண்.1684ஐக் காட்டி தவறுதலாக எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் எனக்கோ எனது அண்ணன் ராஜாங்கத்திற்கோ எவ்வித உரிமையும் கிடையாது என்றாலும் வாதி தான் கிஸ்தி வரி ரசீதுகள் செலுத்தி அனுபவம் செய்து வருகிறார் என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.6 முதல் 8 வரையிலான கிரைய ஆவணங்கள் வாயிலாக 43 செண்ட் இடத்தை விற்றுவிட்டோம் என்றால் சரிதான். இடத்தை கிரையம் செய்து கொடுத்த பிறகு நான் எதற்காக யூ.டி.ஆர். பட்டாவின் பேரில் அப்பில் செய்துள்ளேன் என்றால் ஒன்றாம் பிரதிவாதி கிரையம் செய்து கொடுத்த சொத்தில் வில்லங்கம் உள்ளதாக என்னிடம் தெரிவித்ததால் அதில் நான் நடவடிக்கை எடுத்தேன். வழக்கு சொத்தில் எனக்கு உரிமை இல்லை என்றாலும் அந்த சொத்தை கிரையம் எழுதிக் கொடுக்க உரிமை இல்லை என்றாலும், வாதிதான் வழக்கு சொத்தை அனுபவித்து வருகிறார் என்றாலும், பிரதிவாதிகளுக்கு ஆதரவாக பொய்

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும், ராஜாங்கமும் சட்ட விரோதமாக வழக்கு சொத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளோம் என்றாலும், பிரதிவாதிகள் எங்களுக்கு பாத்தியப்பட்ட மற்ற சொத்துக்களில் பின்துயர்ச்சி செய்துவிடுவார்கள் என்ற பயத்தில் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 18.03.2026 கையெழுத்து செய்துள்ளார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.03.18 14:08:40 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்